DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

**SC.No.204/2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 17 | நாள் | : | 13.02.2026 |
| பெயர் | : | வேல்பாண்டியன் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 13th day of February 2026.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

முதல் விசாரணை

நான் தற்போது திருப்பூர் மாநகர வீரபாண்டி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 11.08.2021 அன்று 13.30 மணிக்கு தென்காசி மாவட்டம் சேர்ந்தமரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது சேர்ந்தமரம் காவல் நிலையத்திற்குட்பட்ட குலசேகரமங்களம் அம்மன்கோவில் தெருவைச் சேர்ந்த ஆறுமுகச்சாமி மகள் செல்வி ப்ரியா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவில் 10.08.2021ம் தேதி காலை 11.00 மணி முதல் தெய்வானை என்பவர் காணவில்லை என்று கொடுத்த புகார் மனுவை பெற்று புகார் மனுவின் தன்மைகேற்ப சேர்ந்தமரம் காவல் நிலைய கு.எண். 253/2021 வழக்கின் Women Missing என்ற தலைப்பில் முதல் தகவலறிக்கை பதிவு செய்தேன்.

சேர்ந்தமரம் காவல் நிலைய ஆய்வாளர் பொறுப்பு கடையநல்லூர் காவல் நிலையம் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார். பின்னர் 11.08.2021ம் தேதி மாலை 17.45 மணிக்கு சேர்ந்தமரம் காவல் நிலைய குற்ற எண்.253/2021 வழக்கில் காணாமல் போன தெய்வானை உடன் பிறந்த தம்பி குமார், மற்றும் அவருடைய மனைவி ராஜேஸ்வரி மற்றும் அதே ஊரைச் சேர்ந்த குருசாமி மகன் தேசிங்குராஜா ஆகியோர் குருவிகுளம் பஜாரில் வைத்து தெய்வானையுடன் சென்ற குருவிகுளம் மலையடிப்பட்டி கருப்பசாமி மகன் லட்சுமணத்துரை என்பவரை கொலை செய்துவிட்டதாகவும் அது சம்பந்தமாக குருவிகுளம் காவல் நிலைய கு.எண்.239/2021 கொலை வழக்கு பதிவு செய்திருப்பதாக குருவிகுளம் காவல் நிலைய ஆய்வாளர் திருமதி. சண்முகவடிவு அவர்கள் 28.10.2021ம் தேதி என்னை சேர்ந்தமரம் காவல் நிலையத்தில் வைத்து நிலைய கு.எண்.253/2021 வழக்கு பற்றி விசாரித்தார். அப்போது அவர்களிடம் மேற்படி வழக்கின் முதல் தகவலறிக்கை நகலை ஒப்படைத்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

குருவிகுளம் குற்றவழக்கு சம்பவம் பற்றி எனக்கு நேரில் தெரியாது. அந்த வழக்கு பற்றிய சம்பவங்கள் கேள்விப்பட்டதுதான். எங்கள் காவல் நிலைய கு.எண்.253/2021 வழக்கில் நான் புலன் ஆய்வு மேற்கொள்ளவில்லை. அந்த வழக்கில் புலன் ஆய்வு நடவடிக்கைகள் மற்றும் அதன் முன்னேற்றம் பற்றி எனக்கு தெரியாது என்றால் குருவிகுளம் காவல் நிலைய வழக்கு பற்றி தெரிந்த பின்னர் அதனை மேல்

நடவடிக்கை தேவையில்லை என முடிக்கப்பட்டுள்ளது என்பதால் அந்த வழக்கின் முடிவு பற்றி தெரியும். நான் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் 11.08.2021 அன்று 13.30 மணிக்கு தென்காசி மாவட்டம் சேர்ந்தமரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது குலசேகரமங்களம் அம்மன்கோவில் தெருவைச் சேர்ந்த ஆறுமுகச்சாமி மகள் செல்வி ப்ரியா என்பவர் நிலையம் ஆஜராகி புகார் கொடுத்ததாக கூறுவதும், அதனை நான் பெற்று சேர்ந்தமரம் காவல் நிலைய கு.எண். 253/2021 வழக்கின் Women Missing என்ற தலைப்பில் முதல் தகவலறிக்கை பதிவு செய்ததாக கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. என்னை குருவிகுளம் காவல் ஆய்வாளர் குருவிகுளம் காவல் நிலைய கு.எண்.239/2021 வழக்கு தொடர்பாக என்னை விசாரித்ததாக கூறுவதும் நான் அவரிடம் முதல் தகவலறிக்கை நகலை வழங்கியதாக கூறுவதும் உண்மையல்ல என்றால் சரியல்ல. ஆய்வாளர் தயாரித்த ஆவணங்களுக்கேற்ப நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.02.13 17:50:24 +0530